

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 8.11.2024 அன்று சென்னை மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் கே.எஸ். ரவிச்சந்திரன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## திருமழிசையில் ரூ.71 லட்சம் மதிப்பில் புதிய திட்டப் பணிகள்!

திருவள்ளூர், நவ.9-

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருமழிசை பேரூராட்சி, 15 வது வார்டு, குண்டுமேடு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.15 லட்சம் மதிப்பில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடம் கட்ட பணிகள் துவக்கியும்,

13-வது வார்டு பிரயாம்பத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.15 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டிடம் திறப்பு விழாவும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ. 5 லட்சம் மதிப்பில் புதிய நூலக கட்டிடம் திறப்பு விழாவும், ரூ.36 லட்சம் மதிப்பில் திருமழிசை, நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்றன.

### கோவை மாவட்டத்திற்கு

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட 6 புதிய திட்டங்கள்!

## மாவட்ட மக்கள் வரவேற்று மகிழ்ச்சி!



**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கோவை மாவட்டத்தில் இரண்டு நாள்கள் பயணம் மேற்கொண்டு கள ஆய்வில் ஈடுபட்டார். இரண்டாம் நாளின்போது, ரூ.300 கோடியில் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் ஆய்வகத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கோவை மாவட்ட வளர்ச்சிக்காக 6 முக்கியத் திட்டங்களை அறிவித்தார்கள். இந்த திட்டங்களை வெளியிட்டு கோவையில் சிக்ஸர் அடித்தார் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள். அந்த 6 புதிய திட்டங்கள்.**

(1) கோவையில் உள்ள குறிச்சி சிட்கோவில் தங்க நகை தொழிற்சாலை பூங்கா ஒன்று 126 கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்படும். இந்த பூங்காவில் சோதனை மற்றும் அளவு திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியம் (NABL) அங்கீகாரம் பெற்ற ஆய்வகம் செயல்படும். இதன் மூலம் நேரடியாக 2,000 பேருக்கும், மறைமுகமாக 1,500 பேருக்கும் வேலை கிடைக்கும்.

(2) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னையில் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்ட இராமானுஜம் தகவல் தொழில்நுட்ப நகரத்தைப் போன்றே, கோவையில், தனியார் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து இந்த பெருந்திட்டம் செயல்படுத்தப்படும். சுமார் 36,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய வகையில், மூன்று மில்லியன் சதுரஅடி பரப்பளவில் அமைக்கப்பட உள்ள இந்த தகவல் தொழில்நுட்ப வளாகம், கோயம்புத்தூர் மாநகரத்தின் எதிர்கால வளர்ச்சியில் ஒரு புதிய மைல்கல்லாக நிச்சயம் அமையும்.

(3) அவிநாசி சாலையில் கடந்த ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்டு தொய்வாக நடைபெற்ற உப்பிலிபாளையம் முதல் சின்னியம் பாளையம் வரையிலான உயர்மட்ட மேம்பாலச் சாலை பணிகள் முடுக்கி விடப்படுவ துடன், மக்களின் கோரிக்கையை ஏற்று, சின்னியம்பாளையம் முதல் நீலாம்பூர் வரை மேலும் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு சுமார் 600 கோடி ரூபாய்ச் செலவில் இந்த உயர்மட்ட மேம்பாலச் சாலை நீட்டிக்கப்படும்!

(4) தொண்டாமுத்தூர் பகுதியில் யானைகள் நடமாட்டத்தால் நிகழும் மனித - விலங்கு மோதல் சம்பவங்களைத் தடுக்கவும், பயிர்சேதங்களையும், உயிரிழப்புகளையும் தவிர்க்கவும் சுமார் 7 கோடி ரூபாய்ச் செலவில் 10 கிலோ மீட்டர் நீளத்திற்கு யானை புகாத நவீன பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படும்.

(5) கோட்டூர், வேட்டைக்காரன் புதூர், உடையகுளம் ஆகிய பேரூராட்சிகள் மற்றும் ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கும் 38 கிராமங் களுக்கு பயனளிக்கக்கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் 26 கோடி ரூபாய்ச் செலவில் மேம்படுத்தப்படும். பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் 295 கிராமங்களுக்கு குடிநீர் வழங்கக்கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் 51 கோடி ரூபாய்ச் செலவில் மேம்படுத்தப்படும்.

(6) முதலமைச்சர் அவர்களின் கள ஆய்வுப் பணிகளின்போது அவரைச் சந்தித்த பல்வேறு தரப்புப் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, கோயம்புத்தூர் மாநகராட்சியில், பல ஆண்டுகளாக புதுப்பிக்க ப்படாமல் உள்ள சாலைகள், பாதாளச் சாக்கடைப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள சாலைகள், அதிக குடியி ருப்புகள் இருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள மண்சாலைகள், இவற்றையெல்லாம் தரமான தார்ச் சாலைகளாக மேம்படுத்திட, 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த அறிவிப்புகளை கோவை மாநகர மேம்பாட்டிற்காக வெளியிட்டபோது விழாவில் திரளாகக் கூடியிருந்த கோவை மாநகர பொதுமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள், தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் அனைவரும் வரவேற்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

### ‘அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்’

# திராவிட மாடல் அரசின் புரட்சித் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, நவ.9–**

**அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் தொடர்பாக ‘தினத்தந்தி’ நாளிதழில் வெளியான தலையங்கத்தை மேற்கோள்காட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:–**

”அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் – ஆதிதிராவிடர் – பழங்குடியின மக்களில் இருந்து தொழில்முனைவோர்களை உருவாக்கிடும் திராவிட மாடல்–இன் புரட்சித் திட்டம்!

**இதுவரையில்,**

**பயனாளிகள் – 1988**

**கடன் – ரூ.453 கோடி**

**மா னியம் – ரூ.230 கோடி**

தினத்தந்தியின் இந்தத் தலையங்கம் நமது பணிகளுக்கான ஊக்கம் என்றாலும்; இதன் நோக்கம் தேவையுள்ள மக்களுக்கு முழுதாகச் சென்றடைய, விண்ணப்பிக்கத் தகுதியுடையோர் அனைவரும் இதனைப் பயன்படுத்திக்கொண்டு உயர வேண்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.





# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி, மண்டல வாரியாக நடைபெற்று வருகிறது. ஆறு மண்டலங்களைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், எஞ்சியுள்ள 5, 6, 9 ஆகிய மண்டலங்களுக்கு உட்பட்ட மாவட்ட – மாநகர – மாநில நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில், கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | இடம் |
|---|---|---|---|
| 10/11/2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | 5 | நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கூரப்பாளையம் பிரிவு, பெருந்துறை சாலை, பிச்சாண்டாபாளையம், ஈரோடு – 638 052. |
| 10/11/2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | 9 | கொடி அரங்கம், குதிரைசாரிகுளம் பிரிவு, நான்கு வழிச் சாலை, திருமங்கலம், மதுரை – 625 706. |
| 11/11/2024 திங்கள்கிழமை | காலை 9.00 மணி | 6 | சந்திரா ஏ.சி. ஹால், விவேரா கிராண்ட் ஹோட்டல், பழனி சாலை, திண்டுக்கல் – 624 001. |

மண்டலம் 5, 6, 9 – ஐ சேர்ந்த மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், தவறாமல் இப்பயிற்சியில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 07-11-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்!

# எழும்பூர் தொகுதியில் பல்வேறு நல உதவிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – தயாநிதி மாறன் பங்கேற்பு! இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. ஏற்பாடு!

சென்னை, நவ. 9 -

நவம்பர் 27அன்று கழக இளைஞரணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, எழும்பூர் தொகுதியில் ஏழை எளியோருக்கு உதவிடும் வகையில் நலத்திட்ட உதவிகள்; எழும்பூர் உதயநிதி ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் பள்ளி, கல்லூரி மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் உள்ளிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் நாளை (10.11.2024) முதல் தொடர்ந்து நடைபெற உள்ளன.

வார்டு எண்.58, பெரிய மேடு, நேவல் ஹாஸ்பிடல் சாலையில் நலத்திட்ட உதவிகள்; Our Lady Parkஇல் குத்துச் சண்டை போட்டி; வார்டு எண்.58 ‘அ’, சேவா சக்ரா இல்லத்தில் தங்கியிருக்கும் ஆதரவற்றோருக்கு அறுசுவை உணவும் ஒரு மாதத்திற்குத் தேவையான மளிகைப் பொருட்களும் வழங்குதல்; வார்டு எண். 61, எழும்பூர், தாய்சேய் நல மருத்துவமனையில் நவம்பர் 27 அன்று பிறக்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் தங்க மோதிரம் அணிவித்தல்; வார்டு எண்.61 ‘அ’, பாந்தியன் சாலை, வரதராஜபுரம், சென்னை மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் நலத் திட்ட உதவிகள் வழங்குதல்;

வார்டு எண்.77, கே.பி. பார்க் குடியிருப்பு கால்பந்தாட்ட விளையாட்டுத் திடலில் கால்பந்தாட்டப் போட்டி; வார்டு எண்.77 ‘அ’, சிவராவ் சாலையில் பள்ளி மாணவர்களுக்கு புத்தகப் பை மற்றும் விளையாட்டு உடை (ஜெர்சி) வழங்குதல்; வார்டு எண்.78 இல் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்குதல்;

வார்டு எண்.99, சுந்தரம் பிள்ளை தெருவில் உள்ள சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளி மற்றும் வார்டு எண்.61, சந்தோஷ் நகர் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்கு மாடிக் குடியிருப்பு வளாகம் ஆகிய இரு இடங்களில் பெண்களுக்கான பிரத்யேக மருத்துவ முகாம்கள்;

வார்டு எண்.99, சுந்தரம் பிள்ளை தெரு, சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்; வார்டு எண்.108, சர்வோதயா மகளிர் தங்கும் விடுதி மாணவியருக்கு அறுசுவை உணவும் ஒரு மாதத்திற்குத் தேவையான மளிகைப் பொருட்களும் வழங்குதல்; சேத்துப்பட்டு, மேயர் இராமநாதன் சாலையில் உள்ள சென்னைப் பல்கலைக்கழக விளையாட்டுத் திடலில் கிரிக்கெட் போட்டி; வார்டு எண்.99 ‘அ’ புல்லா புரத்தில் கேரம் போட்டி; புரசை வாக்கத்தில் மேற்கண்ட இரண்டு மருத்துவ முகாம்களில் கலந்துகொண்டு உயர் பரிசோதனைகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட பெண்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் ஆகிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகள் அனைத்திலும் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் பெருநகர சென்னை வளர்ச்சிக் குழுமம் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளருமான தயாநிதி மாறன் மற்றும் எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த மாவட்டக் கழக, பகுதி கழக, வட்டக் கழக இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வரும் செய்தி!

